மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் ப்பாட்சா: இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்று நான் நினைக்கிறேன். எல்லைப் பற்றிய பிரச்னைக்கு இப்போது இடம் இல்லை. மூலக் கேள்வி ஒரு அணைக்கட்டு கட்டுவதைப் பற்றிய திட்டமாகும். அப்படி ஒரு கருத்து இருந்து வருகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பாண்டியார்–புன்னம் புழா திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மூலக்கேள்விக்கு தொடர்பு இல்லை. பாண்டியார்–புன்னம்புழா அணை கட்டுவதைப் பற்றி இப்போது சொல்வது பொருத்தம் இல்லை என்று நினைக் கிறேன்.

Dam across South Pennar

* 93 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an anicut in South Pennar near Kelavarapalli in Hosur Taluk; and

(*b*) if so, the estimated cost for the same and when it will be completed ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம், ஹோசூர் தாலுகாவில், சின்ன செந்திராம், கேலீவரபள்ளி கிராமங் களின் இடையே பொன்னியாற்றின் குறுக்கே, ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் பரிசிலனையில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 1,61,50,000 ஆகும். இந்தத் திட்டம் இப்பொழுது ஆரம்ப காலப் பரிசிலனையில் தான் உள்ளது. ஆகையால் திட்டத்தை முழுவதும் பரிசீலித்த பிறகுதான் இத்திட்டத்தைச் செயலாக்குவதுபற்றி எடுத்துக் கொள்ளமுடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to Kelvaarpalli dam, the investigation engineers have made full investigation and recommended construction of dam there. May I know whether the Government will taken up the question of sanction for a dam at an early date?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme is under detailed examination. It will be possible to report whether this scheme is possible of being taken up for execution only after detailed examination is made.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, பாலாற்றில் மழைக் காலத்தில் வருகிற நீர் எல்லாம் கடலில் கலந்து வீணாகி விடுகிறது. வேலூர் அருகே ஒரு அணை கட்டி, அதை விவசாயத்திற்கு பயன் படுத்தும் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1971 ஜூன் 30]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கடலில் போய் சேருகிற அளவுக்கு பாலாற்றில் தண்ணீர் இருப்ப தாகத் தெரியவில்லை. இப்போது பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் இல்லை.

புலவர் திரு. சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, பழனி தொகுதியில் உள்ள வரதமா நதி, குதிரை ஆறு, பச்சையாறு இவற்றின் குறுக்கே அணைகள் கட்டும் திட்டத்திற்காக அரசாங்கம் ஏதேனும் முன்னேற்பாடு செய்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, வரதமா நதித் திட்டம் பற்றி சில நாட்களுக்கு முன்புதான் அந்த இடம் பார்வையிடப்பட்டிருக்கிறது. குதிரையாறு, பச்சையாறு அணைக்கட்டுத் திட்டங்கள் பற்றிய திட்டம் அரசாங்கத்திடம் இல்லை.

திரு. கே. டி. கே தங்கமணி : தலைவர் அவர்களே, ஹோசூர் தாலுக்காவிலுள்ள அந்த அணைக்கட்டுக்கு ரூ. 1,61,50,000 ரூபாய் என்று செலவு மதிப்பிடப்பட்டு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படி எஸ்டிமேட்டுகள் போட்டதற்குப் பின்னாலும், அந்த அணை தொடங்குவதாகத் தெரியவில்லை. இப் போது, அடுத்த ஆண்டிலாவது தொடங்கப்படும் என்று உறுதி கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது உத்தேச மதிப்பீடு தான். இன்னும் டிடெயில்ட் இன்வஸ்டி கேஷன் நடைபெறவில்லை. டிடெயில்ட் இன்வஸ்டிகேஷனுக்குப் பிறகு தான், அதன் பேரில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, my point has not been answered.

MR. SPEAKER : You can put another supplementary.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அறியவிரும்புவது எல்லாம் என்னவென்றால் இந்த ஆண்டு எடுக்கப்படாமல் இருந்தாலும், அடுத்த ஆண்டு சேர்க்கப்படுமா, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது தான்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய முடிவு இப்போது சொல்வதற்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இது போன்ற பல அணைக் கட்டு திட்டங்கள் கீழ்மட்டத்திலே எல்லாம் பரிசீலிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால்

TRUTH ALONE TRIUMPHS

அந்தத் திட்டங்கள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறதே, அவற்றை எல்லாம் உடனே எடுத்துக்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிக் குறிப்பாக ஏதேனும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறதா, மத்திய அரசின் திட்டக் குழுவின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இனிமேல்தான் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும்.

Coffee plantations in Denkanikota forest.

* 94 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether there is any proposal to raise coffee plantations in the forest areas of Denkanikota taluk in Dharmapuri district; and

(b) if so, the present stage thereto?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழுவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : I definitely learn that the Central Coffee Board had recommended the establishment of coffee plantations (new) at Kolli hills and Denkanikota hills. It has been published in newspapers like 'Economic Times' and it is stated that they are also going to take a film called 'Coffee country' and send it to foreign countries to earn foreign exchange. May I know whether Government had taken steps to start a Coffee Plantation at Denkanikota?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் இருக்கும் கொல்லிமலையில் காப்பி விளைவதற்கு தகுந்த இடம் என்று கருதப்படுகிறது. ஆனால் தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் டெங்கணிக்கோட்டா அதற்கு ஏற்ற இடம் இல்லை என்ற காரணத்தால் அங்கே அதைப்பற்றி யோசிப்பதற்கு இடம் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, அரசாங்கத்திற்குச் சொந்தமான மலைப்பகுதியில் எங்கே காப்பிச் செடி பயிரிடப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது எங்கும் பயிரிடப்படவில்லை, பயிரிடலாமா என்று ஆலோசனையில் இருக்கிறது.